**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 77/2024** **Date:30.06.2026.**

**(DW1)-** வின்சன்ட் ஜார்ஜ்

**<u>வாதி</u>** <u>தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் 221/19 என்றால் சரிதான், ஆனால் ஒப்பந்ததில் தவறுதலாக குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வழக்கின் கோப்புகளை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பிராதில் வழக்கு பட்டிகையாக சர்வே எண் 221/19 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து முன்பு விமலாசாந்தகுமரி என்பவருக்கு பாத்தியப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தில் முன்பு ஒரு பழமையான வீடு இருந்த விரம் தெரியுமா என்றால் தெரியாது.

2. 28.11.2016 ல் வாதி மேற்படி வீட்டையும் சோத்து கிரயம் பெற்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி கல்லூரியில் பேராசிரியாராக பணியாற்றி விபரம் தெரியுமா என்றால் தெரியும். 25.01.2019 தேதியில் வாதி புதிதாக வீடு கட்டுவதற்கு வெள்ளிமலை பஞ்சாயத்தில் இருந்து கட்டிட அனுமதி பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான், மேற்படி விபரத்தை வாதியின் வழக்கறிவிப்பு மூலம் தெரிந்து கொண்டேன். வழக்கு பட்டிகை சொத்தில் புதிதாக வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், என்னால் கட்டப்பட்டது.

3. வழக்கு பட்டிகை வீடு என்னால் முழுமையாக கட்டப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை வீடு வேலை நடக்கும் சமயத்தில் வாதி அவரது குடும்பத்துடன் வாடகை வீட்டில் குடியிருந்தார் என்றால் சரியல்ல. வாதியும் அவரது குடும்பத்தினருடன் வழக்கு பட்டிகை சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் வீடு கட்டுவது சம்பந்தமாக பிரச்சனை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் உரிமை இல்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் வாதியின் உரிமைக்கு இடையூறு செய்ய அதிகாரம் இல்லை என்றால் சரிதான், நான் அவ்வாறு எந்த இடையூறும் செய்யவில்லை.

4. இவ்வழக்கின் வாதி கோரியுள்ள பரிகாரம் என்ன என்றால் தெரியும், நான் வழக்கு சொத்தில் ஆத்துமீறி நுழையகூடாது என்று தாக்கல் செய்யதுள்ளார். வழக்கு பட்டிகை சொத்தில் வாதி மேற்கொள்ளும் கட்டிட வேலைகளுக்கும் இடைஞ்சல்

செய்யகூடாது என்று கேட்டுள்ளார் என்றால் சரிதான், ஆனால் நான் எந்தவித இடையுறும் செய்யவில்லை. நான் வாதியின் சொத்தில் இடையூறு செய்தது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, நான் தான் எனக்கு தரவேண்டிய பணத்தை கேட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

5. கட்டிடம் கட்டுவதற்கு வாதி என்னை ஒப்பந்ததின் அடிப்படையில் நியமித்தார் என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு இடையில் எனது ஒப்பந்ததை வாதி ரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைபதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் ஆட்சேபணை உள்ளது.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**